

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (27.02.2025 ) திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு பணிகளின் தற்போதைய நிலை குறித்தும் மேலும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் விபரம் குறித்தும் அனைத்துத் துறை அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டு இப்பணிகளை விரைவாக முடித்திட உத்தரவிட்டார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மேயர் அன்பழகன் அவர்கள், மாநகர காவல் ஆணையர் காமினி, மாநகராட்சி ஆணையர் சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜலட்சுமி, நகரப் பொறியாளர் சிவபாதம், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்! நாளை

# கரூர் மாவட்டக் கழகம் சார்பில் சைக்கிள் பந்தயம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் செந்தில் பாலாஜி பரிசுகள் வழங்குகிறார்!

கரூர், மார்ச். 01 -

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கரூர் மாவட்ட திமுக சார்பில் கரூர் மாவட்ட அளவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான மாபெரும் அதிவேக சைக்கிள் பந்தயத்தை, மாவட்ட கழக செயலாளர், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்து பரிசு களை வழங்குகிறார்.

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கரூர் மாவட்ட அளவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான மாபெரும் அதிவேக சைக்கிள் பந்தயம் நடைபெறுகிறது. மார்ச் 2ம்தேதி ஞாயிற்றுக்கிழமை மதியம் 3மணி அளவில் அரசு காலனி வாங்கல் சாலையில் நடைபெறும் பந்தயத்திற்கு மாவட்ட துணைச் செயலாளர் எம்எஸ்கே. கருணாநிதி தலைமை வகிக்கிறார். கரூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் பி. முத்து க்குமாரசாமி வரவேற்புரை ஆற்றுகிறார்.



கரூர் மாவட்ட கழக செயலாளர் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி செந்தில் பாலாஜி அதிவேக சைக்கிள் பந்தயத்தை துவக்கி வைத்து பரிசுகளை வழங்குகிறார். ஆண் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக பரிசுகள் வழங்கப் படுகின்றன முறையே முதல் பரிசு 15000 மற்றும் பரிசு கோப்பை, இரண்டாம் பரிசு ரூபாய் 12000 மற்றும் பரிசு கோப்பை, 3ம்பரிசு ரூ.10ஆயிரம் மற்றும் பரிசு கோப்பை, நான்காம் இடம் முதல் பத்தாம் இடம் வரை வரும் நபர்களுக்கு தலா ரூ 3000 மற்றும் பரிசு கோப்பை அமைச்சர் வழங்குகிறார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், பிஆர்.இளங்கோ, க.சிவகாம சுந்தரி, கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் கே.சி. பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கை விளக்க துணை செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளர் முனவர்ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே. பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி. விஜயகுமார், கரூர் மாநகர செயலாளர் எஸ்பி. கனகராஜ், கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி . சரவணன், மாவட்ட கழக நிர்வாகிகள் டி. ராஜேந்திரன், பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பிவி.பாரத், செயற்குழு உறுப்பினர்கள் சுப .ராஜகோபால், குளித்தலை சிவராமன், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம்.துரைராஜ், சாலைசுப்பிரமணி, என்.செல்வராஜ், வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன், தெற்கு பகுதி செயலாளர் க. சுப்பிரமணியன், மத்திய மேற்கு பகுதி பொறுப் பாளர் ஆர் .ஜோதிபாசு, கிழக்கு பகுதி செயலாளர் கோல்டு ஸ்பாட் ஆர் எஸ் .ராஜா, மத்திய கழக பொறுப்பாளர் விஜிஎஸ்.குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் இ.ராமர், எம்எஸ்.மணியன், கே. கருணாநிதி, எம். ரகுநாதன், ஜி. அண்ணாதுரை, அ. சந்திரன், கே.ரவிராஜா, கே. பாஸ்கரன், எம். ராமலிங்கம், எஸ்.சுதாகர், என். மணிகண்டன், த.கார்த்திக், சி.வளர்மதி, வி.கே. வேலுசாமி, எல்.கரிகாலன், ப.தியாகராஜன், சி. கதிரவன், புகழூர் நகர கழக செயலாளர் நகர்மன்ற தலைவர் அ.குணசேகரன், பள்ளப்பட்டி நகரக் கழக பொறுப்பாளர் வாசிம் ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் என். எஸ் ஆறுமுகம், வி .கருப்பண்ணன், விகேடி ராஜ்கண்ணு, எஸ்டேட் வேலுச்சாமி, கே. சாமிநாதன், சி.கருப் பையா, பிபிசரவ ணன், இ.ஜாபருல்லா, சிவகாமி சண்முகம், எஸ். காளியப்பன், எம். சிவசாமி, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், என்.ராமலிங்கம், சிவகாம சுந்தரி, கலாவதி மற்றும் பலர் பங்கேற்றனர்.

மாவட்ட பிரதிநிதி பி.கதிர்காமம் நன்றியுரை கூறுகிறார். கரூர் மாவட்ட கழகம் சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### மார்ச் – 1 கழகத் தலைவர் பிறந்தநாள் விழாவை உதவிகள் வழங்கி

# திருப்பூர் வடக்கு மாவட்டம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## மாவட்டப் பொறுப்பாளர் – மேயர் ந.தினேஷ்குமார் அறிவிப்பு!

திருப்பூர், மார்ச். 1 -

திருப்பூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதி, அவினாசி சட்டமன்ற தொகுதி முழுவதும் மார்ச் 1 கழகத் தலைவர், தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள், மரக்கன்றுகள் நடுதல், ரத்ததானம் செய்தல், கழக கொடி ஏற்றுதல் என பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் எழுச்சியாக கொண்டாடுவோம் என மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந. தினேஷ்குமார் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஓயாமல் உழைத்துவரும் உன்னத தலைவர், உழைப்பால், தியாகத்தால், தொண்டால், அன்பால், நிர்வாகத் திறமையால் இமயம் என புகழ் பெற்றிருந்த போதும் நம்மை உருவாக்கிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் தடம்பற்றி தொண்டரோடு தொண்டராக களத்தில் நின்று இருவண்ணக் கொடி ஏந்தி களமாடி வருகிற வரலாற்று தலைவனாம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஏழை எளியோர் பயன்பெறும் வகையில் நல உதவிகள் வழங்குதல் , கண் தானம், ரத்த தானம் செய்தல் மார்ச் 1 அன்று பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல், நோயாளிகளுக்கு ரொட்டி பழங்கள் வழங்குதல் மாணவர்களுக்கு தேவையான உபகரணங்கள் வழங்குதல் மரக்கன்றுகள் நடுதல், நீர்நிலைகளை செப்பனிடுதல், கழக கொடி ஏற்றுதல் மற்றும் கவியரங்கம் கருத்தரங்கம், வாழ்த்தரங்கம் நடத்துதல் என திருப்பூர் வடக்கு மாவட்டதிற்குட்பட்ட திருப்பூர் வடக்கு, அவினாசி சட்டமன்ற தொகுதி முழுவதும் சிறப்பாகவும், எழுச்சியாகவும் கொண்டாடிடுவோம்.



இதற்கான ஏற்பாடுகளை மாநில , மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் சிறப்பாக செய்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# குறிஞ்சி மலர் மலர்ந்த நாள்

தலைவா உம்மை நினைத்தேன், என்
கண்களில் நீர்;


உம் கொள்கை வழியில்
எம்மை அழைத்திட்டுச் செல்லும்,
தளபதியின் தொண்டனாய்,
கைக் கோர்த்துச் செல்கிறேன்; இப்பொழுது
என் கண்களில் ஆனந்தக் கண்ணீர்;

தளபதியே நீர்
எங்கள் குடும்பத்தில் ஒருவர்,
எங்கள் உள்ளத்தில் வாழ்பவர், சொல்லால்
நிலை நிற்பவர், செயலால் நிலை
உயர்ந்தவர்;

"மதம்" உமது பார்வையில் மனிதம்"
"வழிபாடு" அல்ல;
இந்த உண்மையை உணர்ந்தவர்
உமது வழி,
இந்த உண்மையை அறிந்தும்
குழப்புபவர்
மனித சமூகத்திற்கு எதிரி;

சாதிகள் இல்லையடி பாப்பா,
என முன் மொழிந்தான் பாரதி, இந்த
சமத்துவத்தை செயலாக்க,
உழைப்பதே உமது கொள்கை;

திராவிட விடியலால்
சமூகம் விழித்தது,
ஆன்மாவும் விழித்தது,
பகுத்தறிவு மலர்ந்தது,
கல்வி அறிவு பெருகியது,
அஞ்ஞானம் அழிந்தது,



விஞ்ஞானம் வளர்ந்தது,

மெய்ஞானம் உணர்ந்தான்
தமிழன், தன்னிலை உணர்ந்தான்,
தரணியில் உயர்ந்தான்,
தரணியை உயர்த்தினான்;

இந்நிலை எங்களுக்கு,
உமது உழைப்பால் கிடைத்தது,
தொடர்வோம் உம் வழியில்
வாழ்க நீர் பல்லாண்டு;



**எம். ஜாகீர் உசேன்**



# தி.மு.க. இளைஞர் அணி



## தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், மருத்துவம் மற்றும் கல்வி உதவித் தொகையாக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 25 பேருக்கு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் ரூ.6,25,000/– வழங்கினார்.

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை மாதந்தோறும் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது.

அந்த வகையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்றதில் இருந்து, கழக நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்போது நிர்வாகிகளும் உடன்பிறப்புகளும் அளிக்கும் நன்கொடைகளைக் கொண்டு, கல்வி, மருத்துவம் மற்றும் கழக முன்னோடிகளுக்கான நிதி உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

பொதுமக்களைச் சந்திக்கும்போது பெறப்படும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வு செய்து நிதி உதவிகளை வழங்கி வருகிறார், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின். பிப்ரவரி மாதத்திற்கான நிதி உதவிகளைப் பெறும் 25 பயனாளிகளின் விவரம் வருமாறு:

| வ. எண் | பெயர், முகவரி |
|---|---|
| 1. | மு.சுருளியப்பன், 186, கரியக்கம்மாள் கோயில் தெரு, புலிக்குத்தி, உத்தமபாளையம், தேனி – 625 524 |
| 2. | அ. சஹானா நஸீரின், த/பெ. அக்பர் அலி, ரோட்டுத் தெரு, சாத்துக்குடல் மேல்பாதி, விருதாச்சலம் வட்டம், கடலூர் – 606 001 |
| 3. | ரா.காவியா, த/பெ. ராமலிங்கம், காளியம்மன் கோவில் தெரு, தீவம்பாள்பட்டினம், தலைக்காடு (அ), திருத்துறைப்பூண்டி தாலூகா, திருவாரூர் – 614 711 |
| 4. | க.பவானி, க/பெ. டில்லிபாபு, 241, கிருஷ்ணன் தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம் – 631 501 |
| 5. | ஜெ.ராஜன், த/பெ. ஜெயராமன், 15/8, பஜனை மட சன்னதித் தெரு, வீரவநல்லூர், திருநெல்வேலி – 627 426 |
| 6. | சீ.உதயநிதி, த/பெ. சீனிவாசன், நீலகண்டராயன்பேட்டை கிராமம், அம்மூர் வழி, சோளிங்கர், இராணிப்பேட்டை – 632 501 |
| 7. | சே.பர்ஜானா, த/பெ. சேக் மைதீன், 7/58, 7–வது தெரு, வனத்துறைக் குடியிருப்பு, பெரும்பாக்கம், சென்னை – 600 100 |
| 8. | ஏ.எஸ்.அபிராமி, 130, அயக்கோட்டுவிளை, புத்தன்சந்தை, இடைக்கோடு, விளவங்கோடு, கன்னியாகுமரி – 629 152 |
| 9. | தி.ஹனீஷ், த/பெ. தினேஷ்குமார், 429/357, நாடார் தெரு, சாணார்பாளையம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் – 637 211 |
| 10. | தி.நிவேந்தன், த/பெ. திருநாவுக்கரசர், 8/11, தோட்டக்கார மட தெரு, திருத்தணி, திருவள்ளூர் – 631 209 |
| 11. | என்.ஜி.ஏகாம்பரம், த/பெ. என்.வி.கணபதி, 11–3–61–சி, நடுத்தெரு, சிந்தலப்பட்டடை, நகரி மண்டலம், சித்தூர், ஆந்திர மாநிலம் – 517 590 |
| 12. | சசிரேகா, க/பெ. பாலசந்திரன், 14, கொண்டசாமி லே அவுட், மசக்காளிப்பாளையம், பீளமேடு, கோயம்புத்தூர் – 641 004 |
| 13. | சே.ராபின்சன், த/பெ. சேவியர், 186–ஏ, செபஸ்தியார்புரம், கார்க்கமலம், மணலூர் (அ), மணமேல்குடி தாலூகா, புதுக்கோட்டை – 614 620 |
| 14. | அ.டார்வின் பால், த/பெ. அருண், 11/6, மங்களபுரம் 4–வது தெரு, சேத்துப்பட்டு, சென்னை – 600 031 |
| 15. | பூ.பழ.தனேந்திரன், த/பெ. பழனியப்பன், பூதநத்தம் (கி), மெணசி அஞ்சல், பாப்பிரெட்டிப்பட்டி தாலூகா, தருமபுரி – 636 904 |
| 16. | புண்ணியகோடி, த/பெ. அமிர்தம், 1/17, கோவிந்தசேரி, பாணாவரம் (அ), சோளிங்கர், வாலாஜா தாலூகா, இராணிப்பேட்டை – 632 505 |
| 17. | சு.முத்துகிருஷ்ண பெருமாள், த/பெ. சுப்பு கோனார், 17/197, அம்மன் கோயில் தெரு, தச்சன்விளை, அரசூர் ஊராட்சி, சாத்தான்குளம் வட்டம், தூத்துக்குடி – 628 656 |
| 18. | ச.சர்வஜித், த/பெ. சங்கர்குமார், 1/680, சிவசக்தி நகர், பாம்பன், இராமநாதபுரம் – 623 521 |
| 19. | நா.சேதுநாதன், த/பெ. நாராயணன், சிக்களூர் (அ), அரூர் வட்டம், தருமபுரி – 636 906 |
| 20. | த.அஜித், த/பெ. தவமணி, 8, மோட்டூர் கிராமம், சிறுவாக்கம், வாலாஜாபாத், காஞ்சிபுரம் – 631 552 |
| 21. | பா.ரமேஷ், த/பெ. பாலகிருஷ்ணன், 75/12, வீரமுத்துத் தெரு, தெற்கு உடையார்பாளையம், ஆத்தூர், சேலம் – 636 102 |
| 22. | ப.சுஜிதா, த/பெ. பழனி, 2721, புகழேந்தி சாலை, கிருஷ்ணாபுரம், மருத்துவக் கல்லூரி சாலை, தஞ்சாவூர் – 613 004 |
| 23. | சங்கரநாராயணண், த/பெ. லட்சுமணன், 45/10, அண்ணா நகர், சித்தாப்புதூர் அஞ்சல், கோயம்புத்தூர் – 641 044 |
| 24. | கி.வசந்தா, க/பெ. கிருஷ்ணன், 6, பண்டரிநாதபுரம், பீமநகர், திருச்சி – 620 001 |
| 25. | சு.அபிராமி, க/பெ. சுரேஷ் முத்துசாமி (லேட்), கிழக்குத் தெரு, அணைக்கரைப்பட்டி, ஆண்டிப்பட்டி வட்டம், தேனி – 625 531 |

**“அன்பகம்”**
சென்னை – 18.
நாள் : 27–02–2025.